# பன்னல பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பன்னல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2011 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதி மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மீதியாக கொண்டுவரப்பட்ட மீதிகளுக்கிடையே 5 பேரேட்டுக் கணக்குகளில் ரூபா 203,353,036 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஆ) ஆண்டின் போது நீதி மன்றத் தண்டப்பணமாகக் கிடைத்த ரூபா 11,182,813 தொகைக்கு ஆண்டில் பட்டியலிடல்களான ரூபா 10,015,000 பெறுமதியும் சேர்க்கப்பட்டு ரூபா 21,197,813 தொகை ஆண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டதன் அடிப்படையில் மிகை மற்றும்

பெறவேண்டிய தண்டப்பணம் ரூபா 11,182,813 தொகை அதிகரித்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கடன் உதவியின் கீழ் பெறப்பட்ட கடனுக்காக செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 62,036,763 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் கடன் மூலதனமாக ரூபா 58,272,183 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டதன் அடிப்படையில் ஆண்டின் இறுதியில் கடன் மூலதனம் ரூபா 3,764,580 தொகை குறைத்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 11,962,689 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 9,732,482 தொகையாகக் கொண்டுவரப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,230,207 தொகை குறைத்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) கடன்பட்டோராக (ஏனைய) பதிவேட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட தொகை ரூபா 95,632,958 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 122,677,278 ஆக வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் ரூபா 27,044,320 தொகை அதிகரித்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஊ) பட்டோலைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளபடியான செலவினக் கடன்பட்டோர் மீதி ரூபா 103,218,727 ஆக இருந்தபோதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 77,705,790 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் ரூபா 25,512,937 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) 2011 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தோருக்காக மேலதிகமாக ஒதுக்கப்பட்ட ரூபா 1,544,500 தொகையை சீராக்கும் போது ரூபா 44,500 ஆக பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைத்தல் அடிப்படையில் மீளாய்வண்டின் இறுதியில் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 1,500,000 தொகை அதிகமாகவும் திரண்ட நிதியம் அதே பெறுமானத்தினால் குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) ஒரே தடவையில் செலுத்தும் பணமுறைமையில் (Key money) ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட கடைகளுக்காக கிடைக்கின்ற பணம் வருமானமாக இனங்கண்டு கணக்கு வைக்கப்படாமல் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,160,156 தொகையான மீதியில் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,874,691 சேர்க்கப்பட்டு ரூபா 5,034,877 தொகை செலுத்த வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும்பணம், வைப்பாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,874,691 தொகை குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 3,160,186 தொகை குறைவாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) தொங்கல் தன்மையுள்ள கணக்குகளின் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 73,766 ஆக இருந்ததுடன் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் அந்த மீதி ரூபா 176,367 ஆக இருந்தது. அவ்வாறே 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 37,383,062 தொகையாகக் காணப்பட்ட தொங்கல் கணக்கின் வரவு மீதியில் 2011 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் பிழையாக சீராக்கப்பட்டிருந்த ரூபா 43,821,632 தொகையான மீதியில் தீர்க்கப்பட்டிருக்குமாயின் தொங்கல் கணக்கின் மீதி ரூபா 43,645,264 தொகை வரவு மீதியாக வைக்கப்பட வேண்டி இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 297,309,043 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,155,518 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,730,118 ஆக இருந்தது.

## 2.2. நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 101,484 தொகையான ஊழியர் கடன் மீதி மற்றும் ரூபா 18,708,947 தொகையான கிடைக்க வேண்டிய மூலதன உதவி மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் பெறப்பட்ட ரூபா 60 மில்லியன் அளவிலான கடனுக்காக தவணைப்பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 265,809 தொகையான தாமத தண்டப்பணம் அட்டுறுவாகக் காணப்பட்டதுடன் ரூபா 2,306,887 தொகையான கடன் தவணைப் பணமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 7,441 | 6,577 | 3,138 |
| (ii) | வாடகை | 21,579 | 17,455 | 1,911 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,486 | 1,444 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 72,808 | 71,258 | - |

**2.3.2 ஆதனவரி**

5 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப்படவேண்டி இருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டின் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 2,535,889 தொகையாக இருந்ததுடன் அது வருடாந்த பற்றுச்சீட்டிலான ரூபா 4,040,059 தொகையில் 63 சதவீதம் ஆக இருந்தது. அவ்வாறே ஹமன்கல்ல உப அலுவலகத்திற்குரிய 672 ஆதனவரி அலகுகளின் நீர்கொழும்பு வீதி இடப்பக்கம் 111 ஆதனவரி அலகுகள் மற்றும் நீர்கொழும்பு தெற்கு 143 ஆதனவரி அலகுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மூன்று காலாண்டிற்கும் 27 காலாண்டிற்குமிடையில் அறவிடப்படாது ரூபா 76,529 தொகையான மீதி காணப்பட்டது. இந்த மீதியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 31 - 42 வரையிலான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்தம் ரூபா 2,750 படி 2011 மார்ச் தொடக்கம் இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வாடகைக்கு விடப்பட்ட யக்வில உப அலுவலகத்திற்குரிய கட்டிடத்திற்காக 22 மாதாந்த தவணையாக ரூபா 60,500 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு அறவிட வேண்டியிருந்ததுடன் இந்த நிலுவை தொடர்பாக தண்டப்பண பற்றுச்சீட்டில்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாதாந்த வாடகை ரூபா 650 இற்கு வழங்கப்பட்ட மாகதுர நகரில் அமைந்துள்ள சபைக் கட்டிடத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 354 மாதாந்த தவணைப்பணமாக ரூபா 230,240 அறவிட வேண்டியிருந்தது.

(இ) ஹமங்கொல்ல உப அலுவலகத்திற்குரிய 2003 ஆம் ஆண்டு வரையில் அகற்றப்பட்டிருந்த நடைபாதைக் கடைகளுக்குரியதாகக் காணப்பட்ட ரூபா 12,480 தொகையான நிலுவை மீதி மற்றும் வீட்டு வாடகையின் கீழ் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பற்றுச்சீட்டிடப்படாத 4 இடங்களுக்குரிய ரூபா 42,291 தொகையான நிலுவை மீதியும் காணப்பட்டது.

(ஈ) சினிமா மண்டபத்தை நடாத்திச் செல்வதற்காக ஹமங்கொல்ல உப அலுவலகத்திற்குரிய கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2007 யூன் 30 வரையான காலத்தில் பற்றுச் சீட்டிடல்களின் அடிப்படையில் ரூபா 378,785 நிலுவை காணப்பட்டது. அவ்வாறு 2007 யூலை தொடக்கம் இக்கட்டிடத்திற்குரிய வாடகைப் பணப்பட்டியலிடல்கள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அக் கட்டிடம் உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையின் கட்டிடத்தில் கிரிவுல்ல பொலீஸ் நிலையம் நடாத்தப்படுவதுடன் அதற்குரிய 2003 யூன் 01 வரை ரூபா 299,234 தொகை நிலுவை காணப்பட்டதுடன் அத்திகதி தொடக்கம் வாடகை பற்றுச் சீட்டிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கிரிவுல்ல பொதுச் சந்தைக்குரிய 48 கடைகளில் 18 கடைகளுக்கு 2007 - 2010 காலப்பகுதிக்குரிய வாடகைப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையின் காரணமாக முத்திரையிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 21 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளக் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்தக் கடைகள் தொடர்பாக முத்திரையிடும் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 195,592 தொகையான நிலுவை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கதானே கெதர வியாபாரக் கடைத் தொகுதியில் 10 கடைகள் ஒரு கடை ரூபா 1,000,000 (கீமனி முறையில்) ஒரே தடவையில் செலுத்தும் முறைமையில் வாடகைக்கு வழங்குவதற்காக 2012 சனவரி மாதம் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் 2 கடைகள் மாத்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய 8 கடைகளும் வாடகைக்கு வழங்குவதற்காக மீளவும் 5 சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதிவரையிலும் வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது. வாடகைக்கு வழங்கப்பட்ட 2 கடைகளிலும் ஆண்டின் இறுதியில் ஒரே தடவையில் பணம் செலுத்தும் அடிப்படையின் கீழ் ரூபா 1,009,773 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்தக் கடைகள் தொடர்பாகவும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் கீழ் ரூபா 85,254,744 தொகை செலவில் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட இக் கட்டிடத்தின் தரைமாடியில் 24 கடைகளின் ஆகக் குறைந்த கேள்வி ரூபா 7,749,000 இற்கும் ரூபா 380,000 இற்கும் இடையிலான வீச்சிலும் 25 ஆம் இலக்க மேல்மாடியில் ரூபா 11,106,000 ஒரே தடவையில் செலுத்தும் முறைமையின் கீழ் வாடகைக்கு விடுவதற்கு 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது 4 சந்தர்ப்பங்களில் ரூபா 140,608 தொகை செலவிடப்பட்டு கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் கடைகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழங்க முடியாதிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வசதிகளை வழங்குவதற்கு சபை செலவிட்ட ரூபா 5 மில்லியன் அளவினை உள்ளடக்கி ரூபா 90 மில்லியன் செலவிடப்பட்ட இந்த செயற்திட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட கடனுக்காக 2011 ஆம் ஆண்டின் போது கடன் வட்டியாக ரூபா 2,419,131 தொகையும் 2012 ஆம் ஆண்டின் போது கடன் தவணை மற்றும் வட்டியாக 3 காலாண்டுகளுக்காக ரூபா 2,380,920 தொகையும்

செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்தக் கட்டிடம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கோ செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஒரே தடவையில் செலுத்தும் பணம் மற்றும் சபை நிதியத்தின் கீழ் ரூபா 9 மில்லியன் அளவிலான கிரயத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 24 கடைகளைக் கொண்ட வெட்டகெய்யாவ வியாபாரக் கடைத் தொகுதியின் 8 கடைகள் ஒரே தடவையில் பணம் செலுத்தும் முறைமையின் கீழ் வாடகைக்கு வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது. அவ்வாறே ஒரே தடவையில் பணம் செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்ட கடைகளிலிருந்து 3 கடைகளில் ரூபா 745,330 தொகையான நிலுவை காணப்பட்டது. ஆண்டின் இறுதி வரையிலும் மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் பொது வசதிகள் காணப்படாமையின் காரணமாக இந்த சந்தைத் தொகுதியை திறந்து வாடகைப் பணம் அறவீடுகள் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) சபையினால் விற்பனை வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர பற்றுச்சீட்டிடல்களுக்குரிய 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி இல 59 மற்றும் 67 வரையுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்களுக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த ஹோட்டல்களின் அல்லது சிற்றுண்டிச்சாலைகளின் புரள்வின் அடிப்படையில் 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணம் அறவிடப்பட முடியுமாக இருந்த போதிலும் சபையினால் அவ்வாறு இனங்காணப்பட்ட ஒரு நிறுவனத்திற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,000 கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.5 வாகனம் நிறுத்திவைத்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் காணப்பட்ட போதிலும் முச்சக்கர வண்டி நிறுத்தி வைப்பதற்குரிய வருடாந்த அல்லது காலரீதியான மெய்மையாய்வு செய்யப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில்

காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கோ அல்லது நிறுத்தும் இடங்களை முறைமைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 மனித வள முகாமைத்துவம்**

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 111 ஆகவும், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 95 ஆகவும், வெற்றிடம் 23 ஆகவும், மேலதிகம் 07 ஆகவும் காணப்பட்டன. அதனுள் 4 தொழில்நுட்ப உத்தியோகத்தரில் 1 உம், 4 நூலகர் பதவிகளில் 2 உம், அங்கீகரிக்கப்பட்ட வருமானக் கட்டுப்பாட்டாளரில் நான்கு பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் அமைய மற்றும் நாட்சம்பள அடிப்படையில் சபை நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்ற 85 ஊழியர்கன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டு வரையில் நூலக உதவியாளர் பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 06 ஆக இருந்ததுடன் அதன் கீழ் 4 நிரந்தர ஊழியர்கள் இருந்ததுடன் 17 பேர் அமைய மற்றும் நாட்சம்பள அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே மீளாய்வாண்டு வரையில் முன்பள்ளிப் பாடசாலைப் பராமரிப்பாளர் பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 04 ஆக இருந்ததுடன் அதன் கீழ் நிரந்தர ஊழியர்கள் இல்லாதிருந்ததுடன் 42 பேர் அமைய மற்றும் நாட்சம்பள அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**2.5 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அபிவிருத்திச் சபைக் காலத்தின் போது சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட யக்வில தம்மின்ன கஹமுல வத்த காணியின் உரிமை தொடர்பாக முறையே 1998 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது குளியாப்பிட்டிய மாவட்ட நீதி மன்றத்திலும் குருணாகல் சிவில் முறையீட்டு நீதிமன்றத்திலும் 2 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டது.

(ஆ) இயந்திர உபகரண அதிகார சபைக்குரிய மோட்டார் கிரேடரை சபை ஊழியரினால் செயற்படுத்தும் போது அதில் நபரொருவர் கீழ் அகப்பட்டு மரணமடைந்ததில் 2011 ஆம் ஆண்டின் போது குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் காணப்பட்டது.

(இ) ஹமன்கல்ல உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் குடிநீர் செயற்திட்டத்திற்காக நீர்க் குழாய்கள் பதிக்கும் போது தனியார் காணி உரிமையாளரினால் நீர்க்குழாய்கள் பதிப்பதற்கு எதிராக எதிர்ப்புத் தெரிவித்தமையின் காரணமாக 2008 ஆம் ஆண்டின் போது குளியாப்பட்டிய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் காணப்பட்டது.

**2.6 ஒப்பந்த நிருவாகம்**

**நேர்க்கூலி அடிப்படையில் செய்யப்பட்ட வேலைகள்**

மாகாண குறித்த மற்றும் மாகாண முதலீட்டின் கீழ் மதிப்பிடப்பட்டப்பட்ட கிரயம் ரூபா 4,279,700 தொகையான 11 வேலைகள் மற்றும் சபை நிதியத்தின் அடிப்படையில் 147 வேலைகளாக 158 வேலைகள் 2012 ஆம் ஆண்டின் போது சபையினால் நேர்க்கூலி அடிப்படையின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகளின் கோவைகளைத் தயாரிக்கும் போது 2003 திசெம்பர் 09 ஆந் திகதிய 7/6/8 ஆம் இலக்க சிவில் பொறியியல் வேலை நிறைவேற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய செயல் நடைமுறைகள் என்ற பெயரிலான உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் காணப்பட வேண்டிய தகவல்கள் உரிய பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,188,492 ஆக இருந்தது.

## 2.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சேதனப் பசளை உற்பத்திக்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக மீளாய்வாண்டு வரையில் ரூபா 2,226,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நிலையத்தின் மூலம் மாதமொன்றிற்கு 1 மெற்றிக் தொன் அளவில் சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அகற்றுவதற்காக விலகெதர பிரதேசத்தில் ஐந்து ஏக்கர் அளவான தனியார் காணியொன்று ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் காணிக்கு அண்மித்ததாக பாடசாலையும் முதியோர் இல்லமும் காணப்பட்டதுடன் மாஓயாவிற்கு அருகில் அமைந்திருந்தது.

## 2.9 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் பிரகாரம் 6 நலன்புரி செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,210,000 தொகையில் மதிப்பிடப்பட்ட ரூபா 979,422 பெறுமதியான 01 கமநெகும செயற்திட்டம் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 202,124 தொகையான ஏனைய நிதியேற்பாட்டில் 08 செயற்திட்டங்கள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்